உ

சிவமயம்



கைதடியூர்

அமரர் ஸ்ரீமான்

## தில்லைநாதர் பொன்னுத்துரை

அவர்கள்

சிவபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

10-06-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் ஸ்ரீமான்

# தில்லைநாதர் பொன்னுத்துரை



அவர்கள்

மலர்வு
**03-06-1912**

உதிர்வு
**11-50-1997**

## திதி வெண்பா

ஆண்டு ஈசுவர வான சித்திரை யிருபத்தெட்டு ஞாயிறு
பூண்ட பூர்வ புனர்பூச ஷஷ்டி தனில்– மாண்புமிகு
பொன்னுத்துரைப் பெம்மான் பூவிலகிப் பொன்னார்திருவடி
அண்மித்த அருமை நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஸ்ரீமான் தில்லைநாதர் பொன்னுத்துரை அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

திருநெறியும், தமிழும் தழுவியதாகக் கைதடிக் கிராமத்தின் சைவப் பாரம்பரியம் முகிழ்ந்தெழுந்துள்ளது. சித்தாந்த உட்பொருளைச் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் உபதேசம் செய்த ஞான பரம்பரையின் திவ்விய தமிழ்த் தொண்டு நிலைபேறு கொண்ட காலச்சுவடுகளைக் கொண்டது இக்கிராமம். இக் கிராமத்திலே தலைசிறந்த வேளாண்மரபும் இலங்கை நாரயண முதலியார் பரம்பரை எனப் போற்றப்படும் உயர் குலத்தின் வழித் தோன்றலாகிய தில்லைநாதர் (பெருஞ்சாலை ஓவசியர்) அவர்களும் அதே பரம்பரையைச் சேர்ந்த கைதையூர் தங்கம்மா அவர்களும் ஆற்றிய தவத்தின் பயனாய் ஓரேயொரு குலக்கொழுந்தாய் திருவாளர் பொன்னுத்துரை அவர்கள் 1912 ம் ஆண்டு ஆனி மாதம் மூன்றாந் திகதி அவனியில் பிறந்தார். இவர்தான் இன்றைய நினைவுக்குரிய உத்தமராவார்.

இவர் குறு குறு என நடந்து, சிறுகை நீட்டி இன்னறும் அடிசில் இட்டு தொட்டும், மேனியில் பூசியும் குழவிப்பருவம் குறும் புகளுடன் உலாவி மகிழ்ந்து பெற்றோரை மகிழ்வித்தார்.

ஆண்டு ஐந்தாகியது. இளஞ்சேய் தன் ஆரம்பக் கல்வியை கைதையூர் முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையிலும் அதனைத் தொடர்ந்து கைதையூர் சீ. எம். எஸ் (C. M. S.) ஆங்கிலப் பாடசாலையிலும் கற்றார். இளமையிலே ஆற்றல் மிகுந்த தன் மகனை உயர் கல்விக்காய் நீர்வேலி அத்தியாயர் இந்துக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். உயர் கல்வியை இனிதாய் முடித்த அண்ணலார் தனது இருபதாவது வயதில் (1932 ம் ஆண்டு) ஓவசியர் பதவியில் தன்னை இணைத்து குளியாப்பிட்டி என்னும் இடத்தில் முதன் முதலாகக் கடமையாற்றினார்.

இவரின் உயர்ந்த குணங்களைக் கண்ட பெரியோர்கள் மணவாழ்க்கைக்கு உரிய பருவத்திலேயே தமது உறவினரான கைதையூர் சுப்பிரமணிய முதலியார் வழித்தோன்றலாகிய சங்கரப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி தங்கப்மாவிற்கு 1937 ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறப் பூஞ்சோலையில் நுழைந்த மணமக்கள் இருவரும் இல்லக விளக்காக "முக்கனிகள்" மூவரை ஈன்றனர். அன்னவர் முறையே குமாரசுவாமி, இரத்தினராஜா, சறோஜினிதேவி ஆவர்.

முச் செல்வங்களும் பெற்றோரின் அன்பு அரவணைப்பில் வளர்ந்துவரும் நாளில் 1958ம் ஆண்டு சித்திரை மாதம் 6ந் திகதி காலன் மனைவியைக் கவரவே பிள்ளைகளுடன் செய்வதறியாது துடிதுடித்தார். அன்னார் மனோதிடம் கூடியவர் என்பதால் தனது மாமியார் சிவபாக்கியத்தின் உதவியுடன் சிறார்களை வளர்த்தெடுத்தார்.

தனது அருமைப் புத்திரி திருமணப்பருவமெய்தியதும் 1970 ஆம் ஆண்டு கோப்பாயைச் சேர்ந்த கைலாயபிள்ளை செல்லாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் வீரசிங்கம் (யாழ் பிராந்திய மருந்தாளர்) அவர்களிற்கு மகளைப் பெருவிருப்புடன் திருமணம் செய்து வைத்து இன்புற்றார். தனது மருமகன் வீரசிங்கத்தையும் தனது புதல்வனாகவே கருதிப் பாசம் காட்டி நேசம் வைத்தார். வீரசிங்கம் சறோஜினிதேவி ஆகியோரின் இல்லறத்தின் பயனாக மயூரன் (இறுதியாண்டு மருத்துவபீட மாணவன், கொழும்பு) தயாளன் (இரண்டாம் வருட மருத்துவபீட மாணவான், யாழ்ப்பாணம்), பார்த்திபன் (ஆண்டு 11 மாணவன், யாழ் பரியோவான் கல்லூரி) எனும் மூன்று குழந்தைகளையும் மகளின் பேரப்பிள்ளைகளாகக் கண்டு இன்புற்றார்.

தனது சிரேஷ்ட புத்திரன் குமாரசுவாமிக்கு (G. O. B. A. Colombo – Newzealand) கோப்பாய் சந்திரசேகரம் இரத்தினம்மா தம்பதிகளின் புத்திரி லோகேஸ்வரியை (Doctor, Colombo – Newzealand) 1975ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார். மகனின் பேரப்பிள்ளைகளாக வசுமதி (விஞ்ஞானபீட மாணவி, University of Auckland, Newzealand), பிரதீபன் (ஆண்டு 10 மாணவன், Selwyn College, Newzealand ஆகிய இருவரையும் கண்டு இன்புற்றார்.

செய்யுந் தொழிலே தெய்வம் கடமைதான் தனது செல்வம் என வாழ்ந்த இரண்டாவது புத்திரன் இரத்தினராசா யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் காசாளராக பதவி புரிந்து கடமையே குடும்பமாக நினைத்துத் தொழில் புரிந்த இவர் தனக்கென ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ள விரும்பவில்லை. இவர் நோய்வாய்ப்பட்டு 1989ல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அமரர் பொன்னுத்துரை அவர்கள் குருநாகல், நீர்கொழும்பு, பன்வல, அவவை ஆகிய இடங்களில் ஓவசியர் பதவியை வகித்துள்ளார். அதன் பின்னர் 1965 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கச்சேரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வந்த கட்டிடப் பகுதி மேற்பார்வையாளராகவும் பதவி உயர்வு பெற்று 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ந் திகதி ஓய்வு பெற்றார்.

வாழ்க்கையின் முதுமைக் காலத்தில் அமரர் அதிகம் சோர்வுடன் இருக்கவில்லை. எப்பொழுதும் ஏதாவது அலுவல்களைச் செய்துகொண்டே இருப்பார் தமது பேரன் மயூரனின் டாக்டர் கோலத்தைக் காணவேண்டும் என்ற அவாவுடன்தான் எப்போதும் இருப்பார் எனினும் அவரின் ஆத்மா மனத்திலேயே பேரனின் டாக்டர் கோல உடையைக் கண்டிருப்பார் என்பது உறுதியான எமது நம்பிக்கையாகும்.

கூற்றுவன் குறித்த நாளும் வந்ததால் அமரர் ஸ்ரீமான் பொன்னுத்துரை அவர்கள் தனது 85 வது வயதில் தனது அருமை மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் மற்றும் சுற்றமும், அயலும் துன்பக் கடலில் தோய்ந்து வருந்த ஆயிரத்துதொழாயிரத்து தொண்ணூற்று ஏழாம் ஆண்டு வைகாசி மாதம் பதினோராந் திகதி (11-05-1997) ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்க ஷஷ்டி திதியும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய வேளையில் இவ்வுலக வாழ்வை நீத்து இறையுலகு எய்தினார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

— திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதண்டுறையானே.

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோ தும்இருந் தறியேன்
வஞ்சம் இதுவொப் பது கண்டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
நணுகா மற்றுரந் துகரத்து மிடீர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னையவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ.

பக்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பக்தி செய்வேன் என்னை நீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்தாடுகின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே

## திருவாசகம்

சிந்தனை நிந்தனக்காக்கி நாயினேற்றன்
கண்ணிணை நின்திருப் பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணி வார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னை
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனி
தனிச் சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடமை யெல்லாமும்
குன்றே அனையாய் யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமயவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை - எதிரில்
போக நாயகனை புயல் வணற்கு அருளி
பொன்னெடும் சிவிகையா ஊர்ந்த
மேக நாயகனை மிக திருவீழிமிழலை
விண்ணிழி செழும் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடையாற்கு வழிவழி ஆளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டேலுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன்னடியின் கீழிருக்கவென்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தான சற்குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## தேற்றம்

பிறந்தவரிறந்தும் பிறந்தோர் பிறந்தும்
சிறந்த உலகினில் சேர்தல் — இறும்பாறு
ஆதலால் ஆறுதல் அஃதே வழியென
போதமே கொள்வோம் புரிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவர் அமரர் திருவாளர் தி. பொன்னுத்துரை அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து அன்னாரது ஈமைச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், சக ஊழியர்கள் அனைவர்க்கும், ஈமைக்கிரிகைகள் சிறப்புடன் நடைபெற பலவழிகளிலும் உதவியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு பற்றிய அனைவருக்கும், அத்துடன் இம் மலரை கூடிய விரைவில் சிறப்புற ஆக்கித் தந்த சிவா அச்சகத்தாருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org